# திருவழிபாட்டின் திருமணிகள்

சீடத்துவம்: எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம

முதல்: இறைவா, எமக்குத் துணைபுரிய வாரும்
எல்: ஆண்டவரே, எமக்குத் துணைபுரிய விரைந்து வாரும்
முதல்: பிதாவுக்கும் சுதனுக்கும்...



# உள்ளதைத் தந்தேன் இறைவா

உள்ளதைத் தந்தேன் இறைவா
உண்மைகள் உரைத்தேன் தலைவா
உள்ளத்தை தந்தேன் தேவா
உயர் பலியாக்குவாய் நாதா

1. ஆலயம் திறந்தது பலி செய்ய நுழைந்தேன்
   அதிலொரு பெருந்துடிப்பு 2
   கலசம் ஒளிர்ந்தது கனி மொழி ஒலித்தது
   அது ஒரு நல்விதைப்பு 2
   தாபத்தை ஏற்றேன் தவறினை களைந்தேன்
   அதிலொரு பலன் அளிப்பு
   உள்ளத்தை அளித்தேன் இடரையும்
   இணைத்தேன் அது ஒரு உளப்பிணைப்பு

2. படைத்த உன்பொருளை உனக்கே படைத்தேன்
   அதிலொரு புது மகிழ்ச்சி 2
   அளித்த மண்பொருளை பலியாய் மாற்றுவாய்
   அது ஒரு விண் நிகழ்ச்சி 2
   மகனின் பலியாய் மானிடன் பொருளாம்
   அதிலொரு தனிசிறப்பு
   இறைவன் நிகழ்ச்சியில் மானிடன் பங்காம்
   அது ஒரு புது பிறப்பு

## மன்றாட்டுக்கள்

திருத்தூதரை அடிக்கல்லாகக் கொண்டு கட்டப்பட்ட கட்டடத்தின் பகுதியாக நாம் இருக்கிறோம். எனவே அவரது தூய மக்களுக்காக தந்தையிடம் மன்றாடுவோம்.

**பதில்: ஆண்டவரே, உமது திருச்சபையை நினைவு கூர்ந்தருளும்.**

தந்தாய், உம் மகன் மரணத்தினின்று உயிர்த்தபோது முதன் முதல் திருத்தூதர்களுக்கு நீர் அவரை வெளிப்படுத்தினீர் - நாங்கள் அவரை அனைத்து மக்களுக்கும் அறிவிக்கச் செய்தருளும்.

ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க உம் மகனை உலகிற்கனுப்பினீர் - இருளிலிருக்கும் மக்களுக்கு உமது நற்செய்தியை எடுத்துச் சொல்ல எங்களுக்கு உதவி புரிந்தருளும்.

நிலைவாழ்வின் வார்த்தையான விதையை மாந்தரின் உள்ளங்களில் விதைக்க உம் மகனை உலகிற்கனுப்பினீர் - இன்று நாங்கள் அவருடைய வார்த்தையை விதைத்து, மகிழ்வுடன் அறுவடை செய்வோமாக.

தமது திரு இரத்தத்தைச் சிந்தி உலகத்தை உம்மோடு ஒப்புரவாக்கும்படி உம் மகனை அனுப்பினீர் - மனிதர்களை உமது நட்புறவில் இணைக்கும் அவரது பணியில் நாங்களும் உடன் உழைப்பாளர்களாக விளங்குவோமாக.

உம் மகனை விண்ணகத்தில் உமது வலப்புறம் அமரச் செய்தீர் - இறந்தவர்களை உமது ஆட்சியின் பேரின்பத்திற்குள் ஏற்றுக்கொள்ளும்.



## ஆண்டவரின் செபம்

பரலோகத்தில் இருக்கிற
எங்கள் பிதாவே,
உம்முடைய நாமம்
அர்ச்சிக்கப்படுவதாக.
உம்முடைய இராச்சியம் வருக,
உம்முடைய சித்தம் பரலோகத்தில்
செய்யப்படுவது போல
பூலோகத்திலும் செய்யப்படுவதாக.
எங்கள் அனுதின உணவை
இன்று எங்களுக்குத் தாரும்:
எங்களுக்குத் தீமை
செய்தவர்களை
நாங்கள் பொறுப்பது போல
எங்கள் பாவங்களைப்
பொறுத்தருளும்.
எங்களைச் சோதனையில்
விழவிடாதேயும்
தீமையிலிருந்து எங்களை
இரட்சித்தருளும்.

## இறுதி செபம்

ஆண்டவரே! புனித பவுலின் மனமாற்றத்தை நாங்கள் இன்று கொண்டாடுகிறோம். நீர் அவரை உலகெங்கும் உமது பெயரை எடுத்துச் செல்லும் கருவியாகத் தெரிந்தெடுத்தீர். நாங்கள் அவரது முன்மாதிரியைப் பின்பற்றவும் அனைத்து மாந்தரின்முன் உமது உண்மைக்குச் சான்று பகரவும் எம் வாழ்வை உம்மை நோக்கி அமைத்துக் கொள்ளவும் எங்களுக்கு உதவியருளும்.

உம்மோடு தூய ஆவியின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர்வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
Print: Steno Print Sdn Bhd
Design: The Mustard Seed Studio

INTERNAL CIRCULATION ONLY

**முன்மொழி 1:** என் வலுவின்மையைப்பற்றியேதான் நான் மனமாரப் பெருமைப் பாராட்டுவேன்: அப்போதுதான் கிறிஸ்துவின் வல்லமை என்மீது தங்கும்.

## சங் 116: 10-19

மிகவும் துன்புறுகிறேன்! என்று சொன்னபோதும்கூட
நான் நம்பிக்கையோடிருந்தேன்.
எந்த மனிதரும் நம்பலாகாது என்று
என் மனக்கலக்கத்தில் நான் சொன்னேன்.

ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா
நன்மைகளுக்காகவும்
அவருக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?
மீட்பின் கிண்ணத்தைக் கையில் எடுத்து,
ஆண்டவரது பெயரை நான் கூவியழைப்பேன்.

ஆண்டவருடைய மக்கள் அனைவரின்
முன்னிலையிலும் அவருக்கு என்
பொருத்தனைகளைச் செலுத்துவேன்.
ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு
அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது.

ஆண்டவரே! நான் உண்மையாகவே உம்
ஊழியன்:
உம் பணியாள் : உம் அடியாளின் மகன்
என் கட்டுகளை நீர் அவிழ்த்து விட்டீர்.
நான் உமக்கு நன்றிப்பலி செலுத்துவேன்
ஆண்டவராகிய உம் பெயரைத் தொழுவேன்

ஆண்டவரே உம் மக்கள் அனைவர்
முன்னிலையிலும் உமக்கு என் பொருத்தனைகளை
நான் செலுத்திடுவேன்:
உமது இல்லத்தின் முற்றங்களில், எருசலேமின்
நடுவில், ஆண்டவரே! உமக்கு என்
பொருத்தனைகளை நான் செலுத்திடுவேன்.

### பிதாவுக்கும்...

**முன்மொழி 1:**என் வலுவின்மையைப்பற்றியேதான் நான் மனமாரப் பெருமைப் பாராட்டுவேன்: அப்போதுதான் கிறிஸ்துவின் வல்லமை என்மீது தங்கும்.

**முன்மொழி 2:** நான் நட்டேன், அப்பொல்லோ நீர் பாய்ச்சினார், கடவுளே விளையச் செய்தார்.

## சங் 126

சீயோனின் அடிமை நிலையை
ஆண்டவர் மாற்றினபோது.
ஏதோ கனவுகண்டவர் போல நாம் இருந்தோம்.
அப்பொழுது நமது முகத்தில் மகிழ்ச்சி காணப்பட்டது.
களிப்பின் ஆரவாரம் நம் நாவில் எழுந்தது.

ஆண்டவர் அவர்களுக்கு மாபெரும் செயல் புரிந்தார்
என்று பிற இனத்தார் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.
ஆண்டவர் நமக்கு அரும்பெரும் செயல்கள் புரிந்துள்ளார்:
அதனால் நாம் பெருமகிழ்ச்சியுறுகின்றோம்.

ஆண்டவரே! தென்னாட்டின் வறண்ட ஓடைகளை
நீரோடைகளாக வான்மழை மாற்றுவதுபோல,
எங்கள் அடிமை நிலையை மாற்றியருளும்.
கண்ணீரோடு விதைப்பவர்கள்
அக்களிப்போடு அறுவடை செய்வார்கள்.

விதை எடுத்துச் செல்லும்போது
அழுகையோடு செல்கின்றார்கள்
அரிகளைச் சுமந்து வரும்போது
அக்களிப்போடு வருவார்கள்.

### பிதாவுக்கும்...

**முன்மொழி 2:** நான் நட்டேன், அப்பொல்லோ நீர் பாய்ச்சினார், கடவுளே விளையச் செய்தார்.

**முன்மொழி 3:** நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே, நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே. நான் நம் ஆண்டவராகிய இயேசுவின் சிலுவையில்தான் பெருமைபாராட்டுவேன்.

## திருவெளி எபே 1: 3-10

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தையும்
கடவுளுமானவர் போற்றி! அவர் விண்ணகம் சார்ந்த,
ஆவியாருக்குரிய ஆசி அனைத்தையும் கிறிஸ்து
வழியாக நம்மீது பொழிந்துள்ளார்.

நாம் தூயோராகவும் மாசற்றோராகவும்
தம் திருமுன் விளங்கும்படி,
உலகம் தோன்றுவதற்கு முன்பே
கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார்.
அவர் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலம்
தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக்கொள்ள
அன்பினால் முன்குறித்து வைத்தார்.
இதுவே அவரது விருப்பம், இதுவே அவரது திருவுளம்.

இவ்வாறு தம் அன்பார்ந்த மகன் வழியாக
நம்மீது ஒப்புயர்வற்ற அருளைப் பொழிந்தருளியதால்
அவரது புகழைப் பாடுகிறோம்.

கிறிஸ்து இரத்தம் சிந்தி தம் அருள்வளத்திற்கு ஏற்ப
நமக்கு மீட்பு அளித்துள்ளார், இம்மீட்பால் குற்றங்களிலிருந்து
நாம் மன்னிப்புப் பெறுகிறோம்.

அந்த அருளை அவர் நம்மில் பெருகச் செய்து,
அனைத்து ஞானத்தையும் அறிவுத் திறனையும் தந்துள்ளார்.
அவர் தமது திருவுளத்தின் மறைபொருளை
நமக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இது கிறிஸ்து வழியாகக் கடவுள் விரும்பிச் செய்த தீர்மானம்.
கால நிறைவில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை
அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில்
ஒன்று சேர்க்கவேண்டும் என்ற திட்டமே அம்மறைபொருள்.

### பிதாவுக்கும்...

**முன்மொழி :** நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே, நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே. நான் நம் ஆண்டவராகிய இயேசுவின் சிலுவையில்தான் பெருமைபாராட்டுவேன்.

## அருள்வாக்கு

1 கொரி 15: 9-10

நான் திருத்தூதர்களிடையே மிகக் கடையவன். திருத்தூதர் என அழைக்கப்பெறத் தகுதியற்றவன். ஏனெனில் கடவுளின் திருச்சபையைத் துன்புறுத்தினேன். ஆனால் இப்போது நான் இந்த நிலையில் இருப்பது கடவுளின் அருளால்தான். அவர் எனக்களித்த அருள் வீணாகிவிடவில்லை. திருத்தூதர்கள் எல்லாரையும்விட நான் மிகுதியாகப் பாடுபட்டு உழைத்தேன். உண்மையில் நானாக உழைக்கவில்லை: என்னோடிருக்கும் கடவுளின் அருளே அவ்வாறு உழைக்கச் செய்தது.

## சிறு மறுமொழி

**முதல்: என் முழு உள்ளத்தோடு ஆண்டவரே, உம்மைப் புகழ்வேன்.**
பதில்: என் முழு உள்ளத்தோடு ஆண்டவரே, உம்மைப் புகழ்வேன்.
**முதல்: மக்களினத்தாரிடையே உமது பெயரை எடுத்துரைப்பேன்.**
பதில்: என் முழு உள்ளத்தோடு ஆண்டவரே, உம்மைப் புகழ்வேன்.
**முதல்: பிதாவுக்கும்...**
பதில்: என் முழு உள்ளத்தோடு ஆண்டவரே, உம்மைப் புகழ்வேன்.

## கன்னிமரியின் பாடல்



**முன்மொழி:**
திருத்தூதரன புனித பவுலே, உண்மையின் போதகரே, பிற இனத்தவரின் ஆசிரியரே, உம்மைத் தெரிந்துகொண்ட கடவுளிடம் எங்களுக்காகப் பரிந்து பேசும்.

என் ஆன்மா ஆண்டவரில் களிகூருகின்றது
என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது.
என் மீட்பராம் கடவுளை நினைத்து என் இதயம்
களிகூருகின்றது.
ஏனெனில், தாழ்நிலை நின்ற தம் அடிமையைக்
கடைக்கண் நோக்கினார்.

இதோ! இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும்,
என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே.
ஏனெனில், வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும்
செயல் பல புரிந்தார். அவர்தம் பெயர் புனிதமாமே.
அவர்தம் இரக்கம் அவரை அஞ்சுவோர்க்குத்
தலைமுறை தலைமுறையாய் உளதாமே.

அவர் தமது கைவன்மையைக் காட்டினார். நெஞ்சிலே
செருக்குற்றவர்களைச் சிதறடித்தார்.
வலியோரை அரியணையினின்று அகற்றினார்,
தாழ்ந்தோரை உயர்த்தினார். பசித்தோரை நலன்களால்
நிரப்பினார், செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார்.

நம் முன்னோருக்கு அவர் சொன்னது போலவே,
ஆபிரகாமுக்கும் அவர்தம் வழிவந்தோர்க்கும்
என்றென்றும் இரக்கம் காட்ட நினைவுகூர்ந்து தம்
அடியானாகிய இஸ்ராயேலை ஆதரித்தார்.

### பிதாவுக்கும்...

**முன்மொழி:** திருத்தூதரன புனித பவுலே, உண்மையின் போதகரே, பிற இனத்தவரின் ஆசிரியரே, உம்மைத் தெரிந்துகொண்ட கடவுளிடம் எங்களுக்காகப் பரிந்து பேசும்.